# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.301/2017
Deposition of Witness for Prosecution PW- 4
Name :திருமதி.சகுந்தலா
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 30th day of November- 2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது ஏற்காடு பையர்நத்தத்தில் குடியிருக்கிறேன். இறந்த குப்புசாமி எனது தகப்பனார். எதிரிகளை தெரியும். எதிரி ராஜாங்கம் எனது பெரியப்பா. 22-8-2016 அன்று மதியம் சுமார் 1-30 மணியளவில் காட்டில் என் அம்மாவும் என் அப்பாவும் என் தங்கையும், வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த நிலத்தை என் பெற்றோர் ஓட்டி வந்தார்கள். அதனை 1 வது எதிரி தனக்கு கொடுக்கும்படி கேட்டு தகராறு செய்து வந்தார். மேற்படி தேதியில் நேரத்தில் 1 வது எதிரி மேற்படி காட்டிற்கு வந்து என் தகப்பனாரிடம் சொத்தை பிரித்துக் கொடுக்கும்படி கேட்டதாகவும், அதற்கு என் அப்பா 1 வது எதிரி நின்ற இடத்திற்கு சென்று ஏன் தகராறு செய்கிறாய் என்று கேட்டதற்கு 1 வது எதிரி துப்பாக்கியால் எனது நிலத்தை கொடுக்கா விட்டால் உன்னை கொல்ல வேண்டியதுதான் என்று சொல்லி சுட்டு விட்டதாகவும் தங்கராஜ் என்னிடம் சொன்னார். அதில் எனது தகப்பனார் இடது தொடையில் காயம் ஏற்பட்டது. பின்னர் என் அப்பா கீழே விழுந்து விட்டதாகவும் அப்போதும் 1 வது எதிரி இன்னும் இவன் சாகவில்லை என்று சொல்லிக் கொண்டு என் அப்பாவின் தலை மற்றும் முகம், கைகளில் தாக்கி காயப்படுத்தியதாகவும் தங்கராஜ் சொன்னார். பின்னர் என் தகப்பனார் அதே இடத்தில் இறந்து விட்டார். மற்றவர்களையும் சுட்டு விடுவேன் என்று மிரட்டியதால் மற்றவர்கள் பக்கத்தில் செல்லவில்லை. தகவல் தெரிந்து நான் போய் பார்த்தேன். 2 வது எதிரியிடம் 1 வது எதிரி துப்பாக்கி வாங்கியதாக கேள்விப்பட்டேன். மேலே கூறியவாறு தாக்கிய பின்னர் 1 வது எதிரி உடைந்த

துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்று விட்டார். போலிசார் விசாரித்தார்கள். இது குறித்து என் அம்மா போலிசில் புகார் கொடுத்தார்.

குறுக்கு விசாரணை( 2 வது எதிரி தரப்பில்)

2 வது எதிரியிடமிருந்து துப்பாக்கியை 1 வது எதிரி வாங்கியதாக நான் கேள்விப்பட்ட சங்கதி தவறு என்றும் அவ்வாறு தங்கராஜ் என்னிடம் சொல்லவில்லை என்றும் சொல்வது சரியல்ல. வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.,

குறுக்கு விசாரணை( 1 வது எதிரி தரப்பில்)

இல்லை.

Sd/- Tmt. Sakunthala

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.

<u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, <u>SALEM.</u>

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No. 301 /2017
Deposition of Witness for Prosecution PW-5
Name :திரு. குமார்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 30th day of November- 2021.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது ஏற்காடு மாரமங்கலத்தில் குடியிருக்கிறேன். இறந்த குப்புசாமி எனது மாமனார். அவர் எனது மாமியாரின் இரண்டாவது கணவர். எனது மாமியார் மாதுவின் மகள் தனம் என்பவரை நான் திருமணம் செய்திருக்கிறேன். எதிரிகளை தெரியும் . 22-8-2016 அன்று நான் வீட்டிலிருந்தபோது தங்கராஜ் எனக்கு போன் செய்து காட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது மேற்படி தேதியன்று மதியம் 1-30 அளவில் 1 வது எதிரி அங்கு வந்து என் மாமனாரை பார்த்து நிலத்தை பிரித்துக்கொடுக்க கேட்டுஅசிங்கமாக பேசியதாகவும் அப்போது எனது மாமனார் 1 வது எதிரி நின்ற இடத்திற்கு வந்து ஏன் தகராறு செய்கிறாய் நிலம் வேண்டுமென்றால் பிரித்துக்கொள்ளலாம் என்று சொன்னதாகவும் அந்த சமயத்தில் 1 வது எதிரி தான் வைத்திருந்த துப்பாக்கியால் என் மாமனாரை சுட்டதாகவும்அது எனது மாமனாரின் இடது தொடையில் பட்டு காயம் ஏற்பட்டதாகவும் என்னிடம் சொன்னார். பின்னர் என் மாமனார் சாகவில்லை என்று சொல்லிக்கொண்டு 1 வது எதிரி துப்பாக்கி கட்டையால் என் மாமனாரை தாக்கியதாகவும் பின்னர் 1 வது எதிரி அங்கிருந்து போய் விட்டதாகவும் அதே இடத்தில் என் மாமனார் இறந்து விட்டதாகவும் தங்கராஜ் எனக்கு சொன்னார். நான் தகவல் தெரிந்து சம்பவ இடம் வந்து பார்த்தேன். அப்போது என் மாமனார் காயங்களுடன் இறந்து கிடந்தார். பின்னர் என்

மாமியார் மாது காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க போனார். பின்னர் போலிசார் வந்து



இடத்தை பார்த்து விசாரித்து விட்டு பிரேதத்தை எடுத்துக்கொண்டு போனார்கள். போலிசார் விசாரித்தார்கள். பிரேதத்தை பார்த்து போலிசார் விசாரித்தபோது நானும் இருந்தேன்.

குறுக்கு விசாரணை(1, 2 எதிரிகள் தரப்பில்)

இல்லை.

Sd/- Kumar

Sd/- Tr.P.Elango,

III ADJ Salem.